# இயல் - ஏழு

# அறிவியல்

# 7. அறவியல்

மனிதன் தன் எண்ணங்களில் நல்லனவற்றை நினைத்து அதன் செயல்பாட்டின் வழி வாழக்கூடிய நிலை அறமாகும். இதில் உடல் ஊனமுற்றோர், வயதானவர்கள் போன்றவர்களுக்குத் தம்மால் முடிந்த வரையிலும் அவர்களின் வேலையினைச் செய்துகொடுத்தல், உண்மையைப் பேசுதல், பிறருக்கு நன்மை செய்யாவிட்டாலும் தீமை செய்யாமலிருத்தல் போன்றவை அறச்செயலாகும். “மனதளவில் குற்றம் இல்லாதவனாய் இருந்து யாருக்கும் எந்தத் தீங்கும் செய்யாது, இயன்ற அளவு எல்லோருக்கும் நற்காரியங்களைச் செய்வதே அறம்”[1] என்று அறம் என்பதற்கு உ.அலிபாவா விளக்கம் தருகிறார். அறங்கள் குறித்துச் “சமுதாயம் ஒப்புக்கொண்ட பழக்க வழக்கங்களையும் நடைமுறை நெறிமுறைகளையும் மக்கள் வாழ்விற்கு உகந்தவை என்ற நிலையில் குல முதல்வர்கள் அறங்களாக வரையறை செய்துள்ளனர். பயணம் செய்கின்றவர்க்கு உருத்தாமல் அமைக்கப்பட்ட பாதையைப் போல், வாழ்க்கைப் பயணத்தை மேற்கொண்டவர்கள் நடப்பதற்குரிய வழிமுறையே அறம் என அமைக்கப்பெற்றது”[2] என்று சோ.ந. கந்தசாமி விளக்குகிறார். இஸ்லாம் மொழியும் அறம் சார்ந்த கருத்துகளை இவ்இயல் ஆய்கிறது.

### பொறுமையும் அறமும்

அறச்செயல்கள் யாவும் மனிதன் பொருமையைக் கடைபிடிப்பதன் மூலமாகவே அமைகின்றது. கோபத்தைக் கட்டுபடுத்திக் கொண்டு பொறுமையான வாழ்வினை மேற்கொண்டால் அதன்வழி அறச்செயல்கள் செய்வதற்கு உள்ளம் மாற்றத்தினை ஏற்படுத்தும். மனிதன் வாழ்க்கையில் பல்வேறு சிக்கல்களை எதிர்கொள்கிறான். இச்சிக்கல்களிலிருந்து மனிதன் தன்னை விடுவிடுத்துக் கொள்வதற்குப் பல சிரமங்களை அனுபவிக்கின்றான். சில நேரங்களில் மற்றவர்களைத் துன்பப் படுத்துகின்றான். இம்மாதிரியான சூழ்நிலைகளில் பொறுமை ஒன்றே மனிதனைக் காப்பாற்றிட முடியும். இதனை,

> (மனிதர்களே) நீங்கள் பொறுமையுடன் இருப்பீர்களா?
> (25:20)

> நீங்கள் பொறுமையாக இருப்பது உங்களுக்கு
> மிகவும் நல்லதாகும் (04:25)

(இறை நம்பிக்கையாளர்கள்) பொறுமையைக் கடைபிடிப்பார்கள் (13:22)

அல்லாஹ் பொறுமையாளர்களை நேசிக்கிறான் (03:146)

பொறுமையை மேற்கொள்வதே நலமாக இருக்கும் (12:18)

பொறுமையைக் கொண்டும் தொழுகையைக் கொண்டும் உதவி தேடுங்கள் (02:45-153)

எவரேனும் பொறுத்துக்கொண்டு மன்னித்துவிட்டால், நிச்சயமாக அது மிக்க உறுதியான செயலாகும் (46:35)

(நபியே!) நீர் பொறுமையுடன் இருப்பீராக! (16:127, 30:60, 40:55,77)

பொறுமையாளர்களைத் தவிர, அதை (சுவனத்தை) எவரும் அடைய மாட்டார்கள் (28:30)

என்று திருமறையில் இறைவன் குறிப்பிடுகின்றான். இதன் மூலம் பொறுமையுடன் வாழும் மனிதனின் எண்ணங்கள் சிறந்த நிலையில் விளங்கும். அறச்செயல்கள் செய்ய கூடியதாக இருக்கும், இறைவன் திருமறையில் முகம்மது நபி (ஸல்) அவர்களையும் பொறுமையுடன் இருக்கச் சொல்கிறான். ஏனெனில் பொறுமையினைக் கொண்டே அனைத்து நற்காரியங்களும் வெளிப்படுகின்றது.

**அறத்தால் வாழும் வாழ்வு**

மனிதர்கள் நற்செயல்கள் செய்து இறைநம்பிக்கையுடன் வாழ வேண்டுமென்பதைத் திருமறை வலியுறுத்துகிறது. இவ்வுலகில் நன்மை செய்து வாழ்பவர்கள் இறந்த பிறகும் வாழ்வார். தீமை செய்து வாழ்வோர் இருக்கும் போதே இறப்பர். ஆகவே நன்மை செய்து வாழ வேண்டும். இங்ஙனம் வாழ விரும்புபவர்களைத் திருமறை,

அவர்கள் நன்மை நாடுபவராக இருப்பார்கள் (28:12)

என்று எடுத்தியம்புகிறது. மற்றவர்களுடைய பொருட்கள் அவர்களின் அனுமதியின்றிப் பயன்படுத்துவதும் பிறர் பொருட்களை வாங்கிக் கொண்டு ஏமாற்றுவதும் மிகப்பெரிய தவறு. இதனை மோசடி என்கிறோம். மோசடி செய்தல் தவறானது. எவரிடமும் மோசடி செய்யாதீர்கள் என்று திருக்குர்ஆன் எச்சரிக்கிறது.

அல்லாஹ் மோசம் செய்வோரை நேசிப்பதில்லை
(08:27)

எனத் திருக்குர்ஆன் அறிவுறுத்துகிறது.

இறைவனையும் இறுதி நாளையும் வானவர்களையும் வேதங்களையும் நபிமார்களையும் ஒருவன் முழுமையாக நம்புவதும் இறைவன் மீதுள்ள நேசத்தின் காரணமாகத் தமக்கு விருப்பமானப் பொருளை உறவினர்களுக்கும், அனாதைகளுக்கும் அடிமைகளை மீட்பதற்கும் வழங்குவதுடன், தொழுகையை நிலைநாட்டி ஜகாத்தைக் கொடுத்து வருவதுமே நற்செயலாகும் என்று திருக்குர்ஆன் கூறுகிறது. இவ்வாறு இறைநம்பிக்கை கொண்டு நற்செயல்கள் செய்வோரின் தீங்குகள் மன்னிக்கப்படும் எனத் திருக்குர்ஆன் மொழிகிறது. முன்னோர் நடந்த வழி நற்கருமங்கள் செய்ய வேண்டும். வாய்மையுடனிருக்க வேண்டும். தர்மம் செய்ய வேண்டும். நற்குணம், அன்பு, நேசம், போன்ற நற்செயல்களைக் கடைபிடிக்க வேண்டும்.

இறை நம்பிக்கைக் கொண்டு நற்செயல்
செய்தோருக்கு அழகிய கூலியுண்டு (18:88)

எனத் திருமறை குறிப்பிடுகிறது.

தூய்மை உடலுக்கு நலனைக் கொடுக்கும் அதனால் உண்ணும் உணவுப் பொருட்களையும் உடலையும் தூய்மையாக வைத்திருக்க வேண்டும், இதனை நபிமொழியில்,

தூய்மை இறை நம்பிக்கையின் ஒரு பகுதி (நூல்:
முஸ்லிம்)

எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**நட்பும் அறவாழ்வும்**

நட்பு ஒவ்வொரு மனிதனின் தனிப்பட்ட வாழ்க்கையிலும் மிகப்பெரிய மாற்றங்களைக் கொண்டு வரும் தன்மை கொண்டது. மனிதர்கள் தங்கள் வாழ்க்கையில் ஏற்படுத்திக் கொள்ளும் நட்பு, தோழமை ஆகியவற்றிற்குத் திருக்குர்ஆன் மிகவும் அதிகமான முக்கியத்துவத்தைத் தருகிறது. இதனை,

> இறை நம்பிக்கை கொண்ட ஆண்கள் பெண்கள்
> அனைவரும் ஒருவருக்கொருவர் ஆதரவாளர்களாய்
> (நண்பர்களாய்) இருக்கிறார்கள் (9:71)

எனத் திருமறை வலியுறுத்துகிறது.

**உண்மையான வாழ்வு**

மக்கள் தங்களது வாழ்வை உண்மையின் அடிப்படையில் அமைத்துக்கொள்ள வேண்டும். உண்மை என்றைக்கும் நிலையானது, எனவே இஸ்லாமியர்கள் தங்கள் ஒழுக்க மாண்புகளில் உண்மைக்கும் நேர்மைக்கும் அதிக முக்கியத்துவம் தரவேண்டும் எனத் திருக்குர்ஆன் கூறுகிறது.

> உண்மை வந்தபோது பொய்ப்பிப்பவன் பெரும்
> அக்கிரமக்காரன் (39:32)

என்று உண்மையின் மகத்துவத்தைத் திருமறை விளக்குகிறது. யாருடைய மனத்தையும் புண்படுத்தாமல் எல்லோரிடமும் இனிமையாகப் பேசிப் பழக வேண்டும். கனிவான இனிய சொற்களும் மன்னித்தலும் மேன்மையானவையாகும். மனிதர்கள் கடைப்பிடிக்க வேண்டிய நன்னடத்தைகளில் தலைமையானது நேர்வழியாகும். இன்றைய சமுதாயத்தில் வாழும் மக்கள் நேர்வழியை மறந்து பணத்தை மட்டுமே பெரிதெனக் கருதிப் பணம் வரும்வழி எதுவாயினும் சரியே என்று பணம் வந்தால் மட்டும் போதும் என்கிற நிலையில் வாழ்கின்றனர். ஆனால் மனித வாழ்க்கையில் நேர்வழியே நிம்மதியைப் பெற்றுத்தரும் என்பதையும் நேர்வழியில் நடப்பவருக்கு இறைவனின் சாந்தி உண்டாகும் என்பதையும் திருமறை உரைக்கிறது. இதனை,

> சாந்தி உண்டாகும் (இறைவனின்) நேர்வழியைப்
> பின்பற்றி நடப்போர்க்கு (20:47)

எனவரும் திருமறை வசனம் வழி அறியலாகிறது.

பொய் பேசுவதால் நன்மை உண்டாகுமென்று தோன்றினாலும் உண்மையிலேயே நிலைத்திருக்க வேண்டும். பிறரைச் சிரிக்க வைக்கவும் மகிழ்ச்சிப்படுத்தவும் கூடப் பொய் பேசக்கூடாது. பொய் பேசுவோரை,

> அவர்கள் பொய் சொல்லும் காரணத்தினால் அவர்களுக்குத் துன்பம் தரும் வேதனையுண்டு (2:10)

> எவன் பொய்யுரைத்து மக்களைச் சிரிக்க வைக்கின்றானோ அவனுக்குக் கேடுதான்! (நூல்: திர்மிதி)

எனத் திருமறையும் நபிமொழியும் எச்சரிக்கின்றன.

**சமுதாய வாழ்வில் அறம்**

சமுதாயத்தில் வாழும் மக்கள் அனைவரும் ஒற்றுமையுடன் ஒருவருக்கொருவர் உறவாக இருந்தால்தான் சமுதாயம் முன்னேற்றமடையும்.

> இறை நம்பிக்கையாளர்கள் ஒருவர் மற்றொருவர்க்குச் சகோதரர் ஆவார். உங்கள் சகோதரர்களுக்கு இடையில் தொடர்புகளைச் சீர்படுத்துங்கள் (13:28)

எனச் சமூகச் சிறப்பினைத் திருக்குர்ஆன் சுட்டிக்காட்டுகிறது. தவறு செய்தல் மனித இயற்கை. ஆகவே தவறு இழைப்பவர்களுக்கு அவர்களின் தவறுகளை உணர்த்தி மன்னிக்க வேண்டும்.

> நாம் உங்களுக்காக உங்கள் குற்றங்களை மன்னிப்போம் (02:58)

இறைவன் மனிதர்களின் குற்றங்களை மன்னிக்கிறான். ஒவ்வொரு மனிதனும் தன்னைப்படைத்த இறைவனுக்கும் பெற்றோருக்கும் தனக்கு உதவி புரிந்தவர்களுக்கும் கட்டாயம் நன்றி செலுத்த வேண்டுமென்பது கடமை.

**அன்பும் அறமும்**

இல்வாழ்க்கையில் அன்பு செய்வதைச் சிறந்த பண்பாகவும் அறம் செய்வதைப் பயனாகவும் கொண்டு வாழவேண்டும் என்கிற கருத்தை வலியுறுத்தும் விதமாக,

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது[3]

என்ற குறளில் வள்ளுவர் மொழிந்துள்ளார். ஒருவரின் மனம் நெகிழும் படியாக மற்றொருவர் அவர்மேல் வெளிப்படுத்தும் நேசமும் நட்பும் கலந்த உணர்வே அன்பாகும். இறைவன் மீதும் சகமனிதன் மீதும் அன்பு செலுத்த வேண்டுமென்று இஸ்லாம் இயம்புகிறது. இதனை,

எவர் என்னை நேசிக்கிறாரோ அவர் சுவனத்தில்
என்னுடன் இருப்பார் (நூல்: முஸ்லிம்)

என்று நபிமொழி உணர்த்துகிறது.

இறைவனுக்கு அடிபணிந்து வாழவேண்டும். தாய் தந்தையரிடம் நல்லவிதமாக நடந்து கொள்ள வேண்டும். உறவினர்கள், அனாதைகள், வரியோர்கள் ஆகியோருடனும் நல்லவிதமாக நடந்து கொள்ள வேண்டும். உறவினர்களான அண்டை வீட்டார்களுடனும், உறவினர் அல்லாதவர்களிடமும் நம்முடன் இருக்கும் நண்பர்களுடனும் வழிப்போக்கர்களிடமும் பணியாட்களிடமும் அன்பாக நடந்து கொள்ள வேண்டும் என்று திருக்குர்ஆன் வழியுறுத்துகிறது. உழைப்பு மனிதனை உயர்த்தும் உழைக்காமல் இருந்து உண்டு வாழ்பவர்கள் செல்வங்களைக் கரைத்து வருந்திய வரலாறுகளைப் பலரும் நன்கறிவர், உழைப்பின் தேவையை அனைத்துச் சமயங்களும் எடுத்துரைப்பதைப் போலவே திருக்குர்ஆனும் எடுத்துரைக்கிறது.

அவனே பகலை உழைப்பிற்கு ஏற்றவாறு
ஆக்கியிருக்கிறான் (25:4)

என்கிறது திருமறை வசனம். இது அனைவரும் உழைத்து அன்புடன் வாழ வேண்டும் என்ற சிந்தனையைத் தருகிறது.

கல்வி கற்றோரை அவர் எந்நிலையிலிருப்பவராயினும் மதித்து நடக்க வேண்டும். ஏனென்றால், பிற செல்வங்களைக் காட்டிலும் கல்விச் செல்வம் சிறந்தது; தலையாயது.

நாம் அவருக்கு நம்மிடமிருந்து கல்வி ஞானத்தையும்
கற்றுக் கொடுத்திருந்தோம் (18:65)

என்னும் திருமறை வசனம் இறைவன் மனிதர்களுக்குக் கல்வியை அருளியதைக் காட்டுகிறது.

**செல்வமும் ஆணவமும்**

செல்வத்திற்கு அதிபதியாக இருக்கக் கூடியவர்கள் அதனைத் தாங்கள் அனுபவித்து மகிழ்ச்சியாக இருப்பதைப் போன்று பிறருக்கும் கொடுத்துப் பிறரையும் மகிழ்ச்சிப்படுத்த வேண்டும் என்று திருக்குர்ஆன் கூறுகிறது.

கஞ்சத்தனத்தைக் கைவிடுங்கள் என்று கேட்டுக் கொள்கிறது. மனிதன் தன்னைப் பெரிதாக நினைத்துக் கொண்டு பிறரைத் தாழ்வாகக்கருதி நடத்துதலே ஆணவமாகும். இது நல்ல செயல் அல்ல.

> ஆணவம் என்பது உண்மையை மறுப்பதும் பிறரை
> இழிவாக எண்ணுவதும் ஆகும் (நூல் : முஸ்லீம்)

என்றுரைக்கிறது நபிமொழி.

**பொய்யும் புறமும் பேசுதல்**

பொய் பேசுபவன் தனக்குத் தானே தீங்கினை ஏற்படுத்திக் கொள்பவனாவான். இவ்வாறு பொய்ப் பேசுபவன் சமுதாயத்தில் நல்லனவற்றை இழப்பதைத்தவிர வேறெதையும் பெறமாட்டான். எந்தத் தேவையும் இல்லாத போதும் பாவம் செய்யத் தூண்டும் கொடிய பழக்கமே பொய்யாகும். இதனால் விளையும் தீமைகள் மனிதனைக் குழப்பத்தில் ஆழ்த்திவிடும் குழப்பம் விளைவித்து வாழ்கின்ற வாழ்வு இஸ்லாமிய நெறிக்குப் புறம்பானது என்பதைத் திருக்குர்ஆன்,

> குழப்பம் செய்வது கொலையைவிடக் கொடியதாகும்
> (2:27)

என்று கூறுகிறது. பிறரைப் பற்றி அவர் இல்லாதபோது பேசுதல் புறமாகும். இது ஒரு பாவச்செயலாகும். இவ்வாறு பேசுவது பற்றி,

> உங்களில் ஒருவர் மற்றவரைப் பற்றி புறம் பேச
> வேண்டாம் (49:12)

என்று திருக்குர்ஆன் கூறுகிறது.

**கோபமும் பொறாமைக்குணமும்**

கோபம் மனிதனிடம் இருக்கக் கூடாத குணமாகும். கோபத்தினால் மனிதர்களுக்குத் தீமைகளும் அழிவுகளும் இழப்புகளும் ஏற்படும் கோபத்தைக் கட்டுபடுத்திக் கொள்பவன் சிறந்த வீரனுக்கு ஒப்பாவான். பொறாமைக்குணம் தீயகுணங்களிலேயே மிகக் கொடியது. இது மனிதனை அடியோடு அழித்துவிடும். நெருப்பு விறகைத் தின்பது போன்ற பொறாமை மனிதர்களின் நன்மையைத் தின்று விடுகின்றது.

> அல்லாஹ் தன் அருளினால் மனிதர்களுக்கு வழங்கியவற்றின் மீது இவர்கள் பொறாமை கொள்கிறார்களா? (04:54)

என்று இறைவன் மக்களிடம் கேட்பதை இவ்வசனம் உணர்த்துகிறது.

**இலஞ்சம்**

மக்கள் தங்களின் காரியங்களைச் சாதித்துக்கொள்ள வேண்டும் என்னும் சுயநலப் போக்கில் இலஞ்சம் கொடுக்கின்றனர். சில பொருளாசைகளைக் கொண்ட அதிகாரிகள் தங்களின் வசதிகளைப் பெருக்கிக் கொள்ள வேண்டுமென்பதற்காக இலஞ்சம் பெறுகின்றனர். இச்செயல் சரியானது அல்ல. திருக்குர்ஆன் இலஞ்சம் வாங்காதீர்கள் என்று அறிவுறுத்துகிறது. இதனை,

> அநியாயமாகத் தின்பதற்காக அதிகாரிகளிடம் (இலஞ்சம் கொடுக்க) நெருங்காதீர்கள் (2:188)

எனத் திருமறையும்,

> இலஞ்சம் கொடுப்பவர். வாங்குபவர், ஏற்பாடு செய்பவர் இம்மூவரையும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சபித்தார்கள் (நூல்: அஹ்மத், ஹாசிம்)

எனவரும் நபிமொழியும் கடிந்துரைக்கிறது.

**சந்தேகம் கொள்ளுதல்**

சந்தேகம் கொள்ளுதல் கருத்து வேறுபாட்டை ஏற்படுத்திப் பிரிவினையை உண்டாக்கும். ஆகவே இதனைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். இது குறித்து,

> நீர் சந்தேகம் கொள்பவர்களில் ஒருவராகிவிடாதீர் (06:114)

எனத் திருமறை மொழிகிறது. சமுதாயத்தில் தனக்கும் தன்னால் பிறருக்கும் யாதொரு பயனும் இல்லாமல் பலா் வாழ்ந்து கொண்டிருக்கின்றனா் இது தவறானது. தீயோா், நயவஞ்சகா், வம்பா் ஆகியோருடன் தொடா்பு கொள்ளல், வீண்தா்க்கம் செய்தல், வீண்பொழுது போக்குதல், வீண் செயல் செய்தல், அநியாயம் செய்தல் மோகம் கொள்ளல் சிற்றின்பங்களில் ஈடுபடல் மனமாசுடன் இருத்தல் பிறா்பொருளை விரும்புதல், கொடுங்கோலாட்சி செய்தல், சண்டை செய்தல், ஒருவரையொருவா் ஆட்டுவித்தல், சமயக்குதா்க்கம் செய்தல், சாதி மத பேதம், கல்நெஞ்சத்துடனிருத்தல், துரோகம், கபடம், பெரியோரை இகழ்தல், சுயநலம்பாா்த்தல், பகட்டு, களவு, சதி, நடிப்பு, துன்பம் செய்தல், மறதி, சோம்பல் முதலியவை இருத்தல் கூடாது. சினம் கொள்ளுதல், குற்றம் புரிதல், சப்தமிட்டு அதிகம் சிரித்தல், மதிகெட்டலைதல், சொகுசாக இருத்தல் ஆகியவற்றையெல்லாம் திருக்குா்ஆன் கூடாது என்று வலியுறுத்துகின்றது. இவ்வாறு தீங்கான பண்புகளை எல்லாம் தள்ளி வாழ்வோரின் வாழ்வு செம்மைபெறும் என்று திருமறை விளக்குகிறது. இது போன்ற நற்செயல்கள் செய்து இறைநம்பிக்கையுடன் வாழவேண்டும் என்பதை மனிதா்களுக்குத் திருமறை வலியுறுத்துகிறது.

### முடிவுகள்

- ❋ இறை நம்பிக்கைக் கொண்டு நற்செயல்கள் செய்வோரின் தீங்குகள் மன்னிக்கப்படுமெனத் திருக்குா்ஆன் மொழிகிறது.
- ❋ அல்லாஹ் பொறுமையாளா்களை நேசிக்கிறான் என்று திருமறை கூறுவதன் மூலம் பொறுமை இஸ்லாத்தின் அறச்செயலாக விளங்குகிறது.
- ❋ இஸ்லாம் ஒருவனது வாழ்வை உண்மை, நோ்மை அடிப்படையில் அமைத்துக் கொள்ள வேண்டுமென்கிறது. பொய் உரைப்பவனுக்குக் கேடுகள் வந்து சேரும் என எச்சரிக்கிறது.
- ❋ ஒருவன் தான் என்னும் ஆனவத்தை விட்டொழித்துப் பிறருக்குத் தானங்கள் கொடுப்பதை இஸ்லாம் விரும்புகிறது. பொய், புறம் பேசுதல், கோபம் கொள்ளுதல், சந்தேகப்படுதல், பொறாமை குணம், இலஞ்சம் இவற்றை இஸ்லாம் கடிந்துரைக்கிறது.
- ❋ மனிதா்கள் நற்செயல்கள் செய்து இறை நம்பிக்கையுடன் வாழ்வதையே திருமறை வழியுறுத்துகிறது.

**அடிக்குறிப்புகள்**

1. உ.அலிபாவா, தமிழில் இஸ்லாமியச் சதக இலக்கியங்கள், ப.279.

2. சோ.ந. கந்தசாமி, குறுந்தொகைத் திறனாய்வு, ப.120.

3. மு. வரதராசன், (உ.ஆ.), திருக்குறள் - தெளிவுரை, பா.45.